www.tamilarangam.net

# மதிப்பிற்குரிய ஈழமக்களுக்கு

அண்மை காலங்களில் எமதியக்கம் பற்றி பரப்பப்பட்டு வரும் பொய்யான செய்திகளையும் அவதூறுகளையும் பற்றி நாம் மக்களுக்கு ஓர் தெளிவான விளக்கமளிக்க கடமை பட்டிருப்பதுடன் எமது தற்கால நடவடிக்கைகள் சம்பந்தமான ஓர் கொள்கை விளக்கத்தையும் தர விரும்புகின்றோம்.

அண்மையில் PLOT இயக்கம் வெளியிட்ட துண்டுப்பிரசுரமொன்றில் நிமிர்ந்துநின்று, துணிந்து நின்று நேருக்கு நேராய்ப் போரிட, போராடி மடிய நெஞ்சில் துணிவும் முதுகெலும்பும் இல்லாத EPRLF LTTE யினரும், PLOT இனையும், அப்பாவிப் பொது மக்களையும் காட்டிக் கொடுத்தும் தாக்கியும் வருவதாகவும் குறிப்பிட்டிருந்தனர்.

ஒடுக்கப்பட்டதும் அடக்கப்பட்டதுமான மக்களின் உரிமைக்காக போராடி வரும் EPRLF இயக்கத்தின் போராட்டங்கள் அனைத்துமே ஒடுக்குவோருக்கும் அடக்குவோர்க்கும் எதிரானதாயும் மக்களின் உரிமைகள் ஜனநாயகம் என்பவற்றைக் காப்பதற்காகவுமே நடத்தி வந்துள்ளது. இதன் விளைவாக ஸ்ரீ லங்கா அரசின் கூலிப்படைக்கு எதிராக எழுந்த போராட்டத்தில் ஆயுதங்கள், பணம், உணவு வசதி என்பன போதியளவு அற்ற சூழலிலும் துணிவே துணையாய் எதிரியை எதிர்த்து போராடி எதிரியை நடுநடுங்க வைத்தனர் எமது தோழர்கள் என்பதை மக்கள் அறிவீர். வவுனியா மாவட்டத்தில் அரச எதிரிகளுக்கெதிராக அதிகளவு தாக்குதல்களை மேற்கொண்டதும் எமதியக்கமே ஆகும். இதில் நாம் பலதோழர்களை இழந்தும் அஞ்சாது என்றும மக்களுக்காக நிமிர்ந்து நின்றே எதிரியுடன் மோதியிருக்கின்றோம். இதைவிட உள்ஊர் பாசிச சக்தியான LTTE யினர் ஏனைய இயக்கங்களான PLOT, TELO போன்றவற்றைத் தடைசெய்து அவர்களுக்கு உதவி செய்தவர்களையும் கொலை செய்து வந்தபோது எமது தோழர்கள் தம்மைபற்றிப் பொருட்படுத்தாது இவ்வியக்க உறுப்பினர்கள் பலரை பலகஸ்டங்களுக்கு மத்தியிலும் காப்பாற்றினார்கள் என்பதையும் உலகறியும் ஏனெனில் இதுவே LTTE எம்மை தாக்குவதற்கான வெளிப்படையான காரணமாய் இருந்தது இன்று புளொட் இயக்கத்தின் முக்கியஉறுப்பினர்களான வவுனியா தளபதி ஆச்சி, வசந்தன் தம்மை காப்பாற்றிய தோழர் ஐயா, சாரங்கன் ஆகியோரையேநிராயுதபாணிகளாகச் செல்கையில் கடத்திக் கொலைசெய்த PLOT பொறுப்பாளர் காண்டீபன் போன்றோர் இதை இன்றும் மறந்திருக்கமாட்டார்கள் எனநினைக்கின்றோம் அதேசமயம் தற்சமயம் வவுனியாவை தாம் புலிகளிடமிருந்து விடுவித்ததாக கூறி அதிலுள்ளோர் வசிப்போர் அனைவரும் தம் சொற்படியே நடக்கவேண்டும் என கட்டளையிடும் PLOT இயக்க குறுநில மன்னர்கள் இப்போ நடந்து முடிந்த ஈழவிடுதலைப் போரில் மக்களிடமிருந்து உணவுப் பொட்டலங்களைவலு கட்டாயமாகப் பெற்றதைவிட வேறுஎன்ன நடவடிக்கைகளை பொது எதிரிக்கெதிராக எடுத்தார்கள் என்பதை நாம் அறியவிரும்புகிறோம். ஆகவே PLOT இயக்கத்தினர் தமது வார்த்தைகளின் அர்த்தத்தை புரிந்து பாவித்தல் அறிவுடமையாகும்.

எமது போராட்டங்கள் மக்களுக்கானது ஆகவே அதில் மக்களின் எதிரிகளை, மக்கள் விரோத சக்திகளை மிதித்து, அழிக்கவேண்டியேற்படுவது சகஜமே இப்போது எம்மிடம் ஆயுதங்கள் இன்மையால் சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்டும் பொறுப்பையும் ஏற்றுக்கொண்ட இந்திய அமைதிப்படையினருக்கு நாம்மக்கள்விரோதசக்திகளுக்கெதிராக போர் தொடுக்க உதவியளிப்பது நியாயமனதே.

தமக்கே ஈழத்தின் கட்டுப்பாடு முழுக்க வழங்கப்படும் என்ற நப்பாசையில் ஒப்பத்தத்தில் கையெழுத்திட்டபின் மக்கள் தமக்கு ஆதரவு தரமாட்டார்கள் என்பதை புரிந்து கொண்ட LTTE ஏனைய இயக்கங்களை அழிக்க முற்பட்டதுடன், அப்பாவிச் சிங்களப் பொதுமக்களையும் கொன்று குவித்ததையின்மூலம் அவ்வொப்பந்தத்தை உடைத்து மக்களை தான் நினைத்தபடி ஆட்டிப்படைக்க ஓர் சர்வதிகார அரசைப் பெற ஆசைப்பட்டு மக்களை பணயமாக்கி ஆரம்பித்த யுத்தம் பலஆயிரம் மக்களின் உயிர்களையும் உடமைகளையும் சேதத்துக்கு உள்ளாக்கியதால், LTTE யின் இப்பாசிசப் படையிலிருந்து மக்களை விடுவிக்க அமைதியை மக்களுக்கு வழங்கவென போராடிய இந்திய அமைதிப்படைக்கு LTTE யை கட்டுப்படுத்த எமது உதவிகளை வழங்குவதை எமது ஓர் கடமையாகவே கருதுகிறோம்.

ஆனால் அதேசமயம் அப்பாவிப் பொதுமக்கள் பலர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட போது அப்பாவிகள் பலரை விசாரணை அவஸ்தையிலிருந்து மீட்டோம் என்பதை வவுனியா மக்கள் நன்கறிவர் உதாரணமாக வவுனியாவில் கைது செய்யபட்டோரை எவ்வாறு விடுவிப்பதுஎன மக்கள் திகைத்து நின்ற வேளையில் இராணுவ வெகுஜனதொர்பு பிரிவினை ஏற்படுத்தமுன்முயற்சி எடுத்ததுடன் பிரஜைகள் குழுவினருக்கூடாக மக்கள் இராணுவ நடவடிக்கைகளினால் தமக்கு ஏற்பட்டுள்ள பிரச்சனைகளையும் அமைதிப்படையினருக்கு முறையிட வாய்ப்பு ஏற்படுத்தி கொடுத்தவர்கள் நாங்கள் என்பது பிரஜைகள் குழுவுக்கு தெரியும்.

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அதே சமயம் வவுனியா நகரில் பல இடங்களில் முகமூடி கொள்ளைக்காரர்கள், கப்பம் வாங்கும் தெருச் சண்டியர்கள், கசிப்பு வியாபாரிகள் உற்பத்தியாளர்கள், வாகனவழிப்பறியாளர், வாகனக்கடத்தல் காரர்கள் விபச்சாரவிடுதி நடத்துவோர் போன்றோரிடமிருந்து மக்களைக் காக்க நாம் பல விடயங்களை ஆராய்ந்து அவற்றைச் செய்வோர் பற்றிய உண்மை விபரங்களை அமைதி படையினருக்கு அளித்தோம். இது மக்களின் நலன் கருதி வவுனியாவில் மக்களுக்கு அமைதி ஜனநாயகம் சுதந்திரவாழ்வு என்பன கிடைப்பதற்கான போராட்டமே யன்றி PLOT இயக்கத்திற்கு எதிரானதல்ல ஆனால் மேற்கூறப்பட்ட பலவிடயங்களில் PLOT இயக்க உறுப்பினர்கள் சம்மந்தப்பட்டிருந்தர் என்பதனால் PLOT இந்த நடவடிக்கைகளை தமக்கெதிராக எடுப்பது ~~குற்றம்~~ தவறு

நாம் PLOT இயக்கத்தினரை அழிக்க வேண்டும் என்று நினைத்திருந்தால் அவர்களை LTTE யினரால் தடைசெய்யப்பட்டபோது அவர்களை நாம் அவ்வளவு கஸ்டப்பட்டு காப்பாற்றியிருக்க மாட்டோம். ஆனால் அன்று அவர்களை காப்பாற்ற என வவுனியா மாவட்டத்தில் முன்னின்று உழைத்த எமது தோழர்களான மத்திய கமிட்டி உறுப்பினர் தோழர் ஐயா, தோழர் சாரங்கன் ஆகியோரை அவர்களால் காப்பாற்றப் பட்ட காண்டிபனே கைதுசெய்து கொலை செய்த நடவடிக்கைகள் எமக்கு வெறுப்பையும் கோபத்தையும் ஏற்படுத்தினாலும் நாம் அளவுகடந்த பொறுமையே கடைப்பிடித்து வருகின்றோம் ஏனெனில் இது பகுத வெட்கப்பட வேண்டியவர்கள் PLOT இயக்கமே.

நாம் கடந்தகாலங்களில் PLOT இனரை தேடி இருமுறை மட்டுமே இந்திய அமைதிப் படையின் உதவியை நாடியிருக்கின்றோம்.

முதலாவது முறை குஞ்சுக்குளத்தில் முருங்கனில் தோழர் ஐயா, தோழர் சாரங்கன் உட்பட எழுவர் எக்காரணமுமின்றி PLOT இயக்கத்தினரால் கைதுசெய்யப்பட்டு கடத்தப் பட்ட போது எமது தோழர்களின் உயிரைகாப்பாற்ற IPKFன் உதவியை முருங்கனில் PLOT இடமிருந்து ~~எமது~~ தப்பியோடிய தோழர்கள் நாடியிருந்தார்கள்.

இரண்டாவது முறை வவுனியாவில் 3. 5 88 அன்று எமது தோழர் பரனை கோவில்குளத்தில் வைத்து PLOT கைது செய்து கொலை செய்ய இயன்றபோது மக்கள் எமக்கு ஓடிவந்து அறிவித்ததின் பேரில் நாம் IPKFன் உதவியை நாடினோம் ஆனால் நாம் அங்கு செல்ல முன்னே மக்கள் ஆர்ப்பாட்டம் செய்து PLOT இடமிருந்து எமதுதோழரை விடுவித்து காப்பாற்றி விட்டார்கள்.

இவ்விரு சந்தர்ப்பங்களிலும் கூட நாம் PLOT ஐ காட்டிக் கொடுக்க முயலவில்லை. எமது தோழர்களின் உயிரைக் காப்பாற்றவே இவ்வுதவியை அமைதிப்படையிடம் நாடினோம். தம்மிடம் நேரடியாகப் பேசியிருந்தால் தாம் அவர்களை விடுவித்திருப்போம் என PLOT, ஐயாதோழரின் கொலை தொடர்பான அறிக்கையில் மாணிக்க தாசன் கூறியிருந்தது எவ்வளவு பொய்யானதும் என்பதை புளொட்டின் பல உறுப்பினர்களே அறிவர். ஏனெனில் அவர்களை 30. 3. 88 திகதி கைது செய்யப்பட்டதும் 1ம் திகதியே அவர்களை விடுவிக்கும்படி வவுனியாப் பொறுப்பாளர்களான ஆச்சி, விசு ஆகியோரிடம் பேசினோம் LTTE இடமிருந்து தமதுயிரை காப்பாற்றிய ஐயாத்தோழரை தாம் உயிரைக் கொடுத்தாவது காப்போம் என வாக்குறுதியளித்த தோழர் ஆச்சி ஒரு தூதுவரை முருங்கன் அனுப்பியிருந்தார் அதற்கு மறுநாளே 7 பேரில் சாரங்கன் உட்பட ஐவர் தம்பனையில் கை, கால் கட்டப்பட்டு சுடப்பட்டனர். இதன்பின் ஐயாத்தோழரை யாவது காப்பாற்றி தரும்படி கெஞ்சியபோது லண்டனிலிருந்தும், கொழும்பில் இருந்தும் வவுனியாவில் இருந்து அவர்களை விடுவிப்பதாக IPKF முன்நிலையில் வாக்குறுதியளிக்கப் பட்டது பின்னர் 5ம் திகதி ஐயாத்தோழர் சுடப்பட்டு விட்டார் என எமக்கு கூறப்பட்டது ஆனால் இந்த நாடகங்களுக்கு எல்லாம்பின்பே தோழர் ஐயா 7ம் திகதி அதிகாலை கன்னாட்டியில் அவரின் வீட்டருகில் வைத்து சுடப்பட்டுள்ளார். இதைப்பற்றி PLOT ஐ புனிதஇயக்கமாக கருதும் ஆச்சி, விசு, உமா பிரகாஷ் போன்றோர் என்ன பதிலைத் தரப்போகின்றார்கள் துணிவிருந்தால் மக்கள் முன் நிமிர்ந்து நின்று பதில் சொல்லட்டும் பார்க்கலாம்.

இந்தியப் படைக்கு அடிபணிந்து வருவதாக PLOT இனர் குற்றம்சாட்டியிருந்தனர் இதற்கும் எமக்கும் எவ்வித தேவையுமில்லை என்பதை இவர்களுக்கு தெளிவாக கூறவிரும்புகிறோம்.

EPRLF பொறுத்தவரையில் இந்தியா அமரிக்க ஏகாதிபத்திற்கு எதிரானதாய் இருக்கட்டும் சோசலிஸநாடுவின் ஓர் உற்ற நண்பனாயிருக்கட்டும் நாம் இந்தியாவிற்கு கெதிராக செயற்பட தயாரில்லை. தமது சமூகவிரோதச் செயல்களுக்கு ஆதரவளிக்கவில்லை யென்ற குறுகிய கொள்கையடிப்படையில் இந்தியாவிற்கெதிராக செயற்படும் PLOT இனி ஓர் ஏகாதிபத்தியஅடிவருடியாகவே மாற்றும் ~~இந்தியப்படைக்கும்~~ புளொட் தலைவர் உமாமகேஸ்வரன் சிங்கள இனவெறி முற்றுமுழுவதுமான பௌத்தபிக்குகளின் ஆசிநாடி அலைவதுஇதன் துவக்கஅறிகுறியாகும்

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இந்திய அமைதிப்படை இலங்கைக்கு வந்தது சர்வதேச இராணுவச் சமநிலையுடன் நேரடியாகச் சம்பந்தப்பட்ட விடயமாயிருப்பினும் தமிழ் மக்மளுக்கு அமைதியையும் ஜனநாயகத்தையும் பெற்றுத்தருவதும் அதன் ஓர் நோக்கமாகும். அமைதிப்படை வீரர்கள் தமிழ் மக்களை அவர்களின் எதிரிகளிடமிருந்து பாதுகாப்பதே முதன்மையுள்ளதாகக் கருதினார்கள் ஆனால் LTTE யின் குறுகிய சுயநல, அதிகார பதவி வெறியிற்கு இந்திய அரசு துணை போகமுடியாமலிருந்தால், இந்திய இராணுவத்தினருக் கெதிராக மக்களை கேடயமாக்கி நடந்த யுத்தத்தில் ஏற்பட்ட மக்களின் உயிர் உடமை இழப்புகளுக்கு LTTE யே பொறுப்பெடுக்க வேண்டும்.

அதேசமயம் இன்று இந்திய இராணுவம் இலங்கையில் நிலை கொண்டிருப்பதாலேயே சிங்கள காடையர்களினதும், அரச கூலிப்படையினதும் அட்டகாசத்தினால் வெறிச்சோடி போயிருந்த திருமலை நகரில் மீண்டும் மக்கள் தமது வசிப்பிடங்களுக்கு திரும்பி அமைதியுடன் வாழக்கூடியநிலை ஏற்பட தொடங்கியுள்ளமையும் இலங்கையின் தென்பகுதிகளில் தமிழ் மக்கள் கலவரங்களில் பயமின்றி உலவ முடிகின்றமையும் இயக்க மோதல்களினால் அநியாயமாக பல விடுதலைக்காய் புறப்பட்ட இளைஞர்களின் உயிர்கள் ஆயுதப்பலமுள்ளவர்களினால் பறிக்கப்படும் நிலையும் மாறியுள்ளது என்பதையும் தமிழ் மக்கள் உணர்ந்துகொள்ள வேண்டும்.

ஆனால் இக்காரணங்களினாலும் IPKF ன் LTTE க்கெதிரான இராணுவ நடவடிக்கைகளின் போது தமிழ் மக்கள் பாதிக்க படுவதை நாம் வரவேற்க்கமாட்டோம் அதேசமயம் அப்பாவிமக்களும் அடையாளங் காணமுடியாமை கைது செய்யபடுவது சிலசமயம தவிர்க்கமுடியாது என்பதால் அவர்களைக் காப்பாற்றவே நாம் பலசமயங்களில் கடுமையாக உழைக்கவேண்டியுள்ளது ஏற்கெனவே அப்பாவி மக்கள் பலரை அவர்களின் உண்மையினை IPKF ற்கு எடுத்து விளக்கி விடுவிக்க நாம் வழிசெய்திருக்கின்றோம் என்பதை மக்களறிவர் வவுனியாவில் மக்களுக்கு எதிராக நாம் எடுத்தநடவடிக்கை ஏதாவது ஒன்றைப்பற்றி PLOT இயக்கத்தினர் நிருபிப்பார்கள் ஆயின் நாம் எமது அரசியல் வேலைகளையும் நிறுத்த தயாராயுள்ளோம்.

தற்பொழுது IPKF ன் பாதுகாப்பில் இருக்கும் PLOT உறுப்பினர்கள் EPRLF காட்டிக் கொடுத்ததாலேயே பிடிக்கப்பட்டார்கள் என்பதும் ஓர் அப்பட்டமான பொய்யே இதில் 14 பேர் EPRLF தோழர்கள் கொலை சம்மந்தமாக கைது செய்யப்பட்டவர்கள் அதேசமயம் இவர்களுடன் EPRLF உறுப்பினர்களும் கைது செய்யப்பட்டு பின் நிரபராதி எனக்காணப்பட்டு விடப்பட்டார்கள் என்பது யாருமறிந்தது. சதா, குஞ்சன் ஆகியஇருவர் ஓர் மோட்டார் சைக்கிளை ஓர் தம்பதியினரிடமிருந்து மிரட்டிப் பறிக்க முயல்கையில்கைதுசெய்யப் பட்டவர்கள் மேலும் 5 வர் வாகன வழிப்பறி முயற்சி தொடர்பாகக் கைது செய்யப்பட்டவர்கள் இவர்களை விடுவிக்ககோரி நடத்திய ஹர்த்தாலுக்கு மக்கள் மதிப்பளிக்க மறுத்தபோது ஆத்திரமடைந்த PLOT ஒரு லொறியினை எரித்ததுடன் பல வாகனங்களை சேதப்படுத்தியமயாலும் அன்று வவுனியா நகரில் பல கைக்குண்டுகளை வெடிக்கச் செய்து அமைதிக்கு குந்தகம்விளைவித்ததனாலுமே கைதுசெய்ய பட்டார்கள். அவற்றுடன்இவர்கள் LTTE யுடன் கூட்டுச் சேர்ந்து இந்திய இராணுவத்தை தாக்க எடுத்த முயற்சிகளும் இவர்களின்தற்போதய நிலைக்கு காரணமாகும்.

ஆகவே PLOT மீது அமைதிப்படை மேற்கொள்ளும் நடவடிக்கைகளுகு காரணம் PLOT சமூகவிரோத நடவடிக்கைகளே யன்றி EPRLF அல்ல.

ஆனால் இவற்றை EPRLF மேல் சுமத்தி EPRLF இனை pLOT அழித்தொழிக்க முயல்கின்றது 10. 5. 88 அன்றும் எமது வவுனியா தோழர் வின்சன், குரு, புவனா, ரவி மற்றுமொருவர் அடங்கிய குழுவினரால் வாள் கொண்டு பலமாகத் தாக்கப்பட்ள்ளார்.

ஆகவே நாம் மக்களுக்கும் PLOT இனர்க்கும் தெரிவிக்க விரும்புவது என்னவெனில் நாம் மக்கள் விரோத நடவடிக்கைகளுக்கும் எதிரானவர்களேயன்றி மக்களுக்கோ ஏனைய இயக்கங்களுக்கோ விரோதமானவர்களல்லர் ஆகவே PLOT உண்மையான ஓர் மக்கள் இயக்கமாயிருப்பின் எமது தோழர்கள்மீது இயக்கத்தின்மீதும் மேற்கொள்ளப்படும் தாக்குதல்களையும் பொய்பிரசாரம் களையும் உடனடியாக நிறுத்த வேண்டும்' இதுவரை நாம் PLOT இனைக் இந்தியப்படைக்கு காட்டிக் கொடுக்க நினைக்கவில்லை ஏனெனில் நினைத்திருந்தால் 24 மணி நேரத்திற்குள் நகரில் ஒரு புளொட் உறுப்பினர் கூட இல்லாமல் செய்திருக்க முடியும் PLOT மக்களின் நலன்களுக்காய் பாடு படும்வரை நாம் அதற்கெதிராய் செயற்படமாட்டோம் ஆகவே PLOT இயக்கத்தினர் அமைதியையும் சமாதானத்தையும் விரும்புவாகளாயின் எமது இயக்கத்தினர்க்கு எதிரான பகிரங்கமானதும் இரகசியமானதுமான நடவடிக்கை உடனடியாக கைவிடட்டும், அல்லாவிடில் அதன் பின் ஏற்படக் கூடிய விரும்பத்தகாத நடவடிக்கைகளுக்கும் சூழலுக்கும் இவர்களே பொறுப்பேற்க நேரிடும்.

" எமது உழைப்புக்கள் அனைத்தும் ஈழமக்களுக்கே "

' அனைத்து அடக்குமுறைகளையும் தகர்தெறிவோம் '

ஈழ மக்கள் புரச்சிகர விடுதலை முன்னணி **EPRLF**

வவுனியா

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்